# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**தாபனச் சுற்றறிக்கை இலக்கம் : 06/2018**

இலக்கம் 20,வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2018.04.05

பல்கலைக்கழக துணைவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகங்களின் பணிப்பாளர்கள்

**<u>பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் நிதி சார்ந்த அலுவலர்களுக்கான பணி சார்ந்த பயிற்சித் திட்டம் (Induction Training Program)</u>**

2014 செப்தெம்பர் 23 ஆம் திகதிய 13/2014 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கைக்கமைய நிர்வாகம் மற்றும் நிதி சார்ந்த அலுவலர்கள், அவர்களுடைய பதவிகளில் உறுதிப்படுத்துவதற்காக பணி சார்ந்த பயிற்சித் திட்டத்தை பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமான தேவையொன்றாகக் கொள்ளப்பட்டுள்ளதாக 2018.03.08 ஆம் திகதி நடைபெற்ற 982 ஆவது ஆணைக் குழுக் கூட்டத்தின்போது ஆணைக்குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டது.

தகுதிகாண் காலத்தை சிறப்பான வகையில் பூர்த்தி செய்திருந்தாலும், அவர்களது பதவி உறுதிப்படுத்தலுக்கான முன் நிபந்தனையான பணி சார்ந்த பயிற்சித் திட்டத்தை பூர்த்தி செய்திராமை காரணமாக தற்போது வகிக்கும் பதவிகளில் உறுதிப்படுத்தப்படாத நிர்வாகம் மற்றும் நிதி சார்ந்த அலுவலர்கள் பல்கலைக்கழக முறைமையில் இருப்பதாக மேலும் ஆணைக்குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டது.

அதற்கமைய, பெற்றுக்கொள்ள முடியுமான முதலாவது சந்தர்ப்பத்திலேயே அவர்கள் அந்தப் பயிற்சித் திட்டத்தை பூர்த்தி செய்தல் வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் தகுதிகாண் காலத்தை பூர்த்தி செய்தலின் அடிப்படையில் ஏனைய தேவைப்பாடுகளை சிறப்பான வகையில் பூர்த்தி செய்திருப்பின் நிர்வாகம் மற்றும் நிதி சார்ந்த அலுவலர்கள் அவர்கள் தற்போது வகிக்கும் பதவிகளில் உறுதிப்படுத்தப்படல் வேண்டுமென மேலே குறிப்பிடப்பட்ட கூட்டத்தொடரின்போது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

தயவுசெய்து இதன் பிரகாரம், நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.

12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள்/சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. தொழிற்சங்களின் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கோப்பு இலக்கம் : UGC/HR/11